ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2163 - 2020 පෙබරවාරි මස 14 වැනි සිකුරාදා - 2020.02.14

*2163 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | 756 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 757 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.***- (i) *நிதி (திருத்தம்) சட்டமூலம் 2020, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *சேர் பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2020, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2020, மாச்சு மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

755- B82008 - 5,403 (2020/02)

# ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும்

## வடமேல் மாகாண மகாண சபை

*மாநகர சபை கட்டளை*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தில் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 252 ஆம் அதிகாரத்தின் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 289 ஆம் பிரிவின் கீழ் வடமேல் மாகாண சபையின் ஆளுநர் மற்றும் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சர் அவர்களின் அதிகாரத்தினை செயற்படுத்துகின்ற அகமது ஜமால்தீன் மொஹமட் முசம்மில் ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி மாநகர சபைகளின் உறுப்பினர்களுக்காக தொடர்பாடல் மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு செலுத்துவதற்கான கட்டளையினை திருத்தம் செய்து இத்துடன் செயற்படுத்துகின்றேன்.*

*அகமது ஜமால்தீன் மொஹமட் முசம்மில்,*
*வடமேல் மாகாண ஆளுநர்.*

*குருநாகல்,*
*2019, திசெம்பர் 24.*

### கட்டளை

1. இக் கட்டளை மாநகர சபைகளின் உறுப்பினர்களுக்காக தொடர்பாடல் மற்றும் வாகனக் கொடுப்பனவு செலுத்துவதற்கு உரிய கட்டளையாக அடையாளம் காணப்படும்.

2. மாநகர சபைகளின் உறுப்பினர்களுக்காக சபையின் முறையான ஆலோசனைகள் முன்மொழியப்பட்டதன் பின்பு நகர முதல்வருக்காக 10,500.00 ரூபாவும், பிரதி முதல்வருக்காக 8,500.00 ரூபாவும், சபையின் ஏனைய உறுப்பினர்களுக்காக 7,000.00 ரூபா என்றவாறு அதிகபட்சத்திற்கு உட்பட்டு தொடர்பாடல் கொடுப்பனவு மாதாந்தம் செலுத்துதல் அல்லது அந்த அதிகபட்சத்திற்கு உட்பட்டு மாதாந்த தொலைபேசி பற்றுச் சீட்டினை செலுத்துவதற்கான இரண்டில் ஏதாவதொரு விடயத்திற்காக மாத்திரம் மாதாந்தம் செலுத்த முடியும்.

3. மாநகர சபைகளின் உறுப்பினர்களுக்காக சபையின் முறையான முன் மொழிவினை ஏற்றுக் கொண்டதன் பின்பு 7,000.00 ரூபா அதிகபட்சத்திற்கு உட்பட்டு போக்குவரத்து கொடுப்பனவு செலுத்த முடியும்.

4. இக் கொடுப்பனவு சபை நிதியத்தில் இருந்து செலுத்த வேண்டியதுடன், அதற்கான போதியளவு வருமானம் காணப்படுவதாக சபை உறுதிப்படுத்துமாயின் அதற்காக ஆண்டு வரவு செலவு மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

5. கீழ்க் காணப்படும் சந்தர்ப்பங்களில் மாநகர சபை உறுப்பினர்கள் தொடர்பாடல் மற்றும் போக்குவரத்து கொடுப்பனவிற்காக உரிமை கிடைக்காது.

   (i) கொடுப்பனவு செலுத்துவதற்கு உரியமாதத்தில் நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்திற்கு மற்றும் குழுக் கூட்டத்திற்கு பொதுச் சபையின் அனுமதி இன்றி கலந்து கொள்ளலாகாது.

   (ii) ஏதாவதொரு குற்றவியல் குற்றத்திற்கு உரித்தாக தடுப்புக் காவலில் அல்லது சிறைப்படுத்தட்டிருத்தல்.

   (iii) வடமேல் மாகாண மாகாண சபையில் 1991 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கத்திற்கான வடமேல் உள்ளூராட்சி சபைகள் (நிருவாகத்தினை மேற்பார்வை செய்யும் அதிகாரம்) சாசனத்திற்கு அமைய அல்லது மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 277 ஆம் பிரிவின் கீழ் ஏதாவதொரு மாநகர சபையின் உறுப்பினர்களின் நடவடிக்கை மற்றும் பணிகள் இடைநீக்கம் செய்யப்பட்டிருத்தல். என்றாலும், தடுப்புக் காவலில் இருந்த அல்லது சிறையில் இருந்த அல்லது விடுமுறை பெற்றிருந்த அல்லது சேவையை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள காலம் ஏதாவதொரு மாதத்தின் பகுதியாகும் சந்தர்ப்பத்தில் அம்மாதத்தில் மீதி காலத்திற்காக விகிதப்படி கணக்கிட்டு இக் கொடுப்பனவை செலுத்த முடியும்.

6. இந்தகட்டளையில் (அ) பந்தியில் (i) ஆம் உட் பிரிவில் எவ்வாறு குறிப்பிடப்பட்டாலும் உறுப்பினர்கள் பணி கடமைக்காக முறையான அனுமதியுடன் செயல்படும் சந்தர்ப்பத்தில் சபைக் கூட்டத்திற்கு கலந்து கொள்ளாமை காரணமாக அவரின் கொடுப்பனவு உரிமையற்று போகலாகாது.

மாநகர சபைகளின் உறுப்பினர்களுக்காக தொடர்பாடல் கொடுப்பனவு செலுத்துவதற்கு முன் விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2014.11.28 ஆந் திகதி 1891 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டளையினை இத்துடன் இரத்துசெய்து இக்கட்டளையினை இப்போது இருந்துநடைமுறைப் படுத்தப்படும்.

இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

02-214

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடக்கு மாகாண மாகாண சபை

பிரதம செயலாளர் அலுவலகம், வடக்கு மாகாணம்

1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினாலும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச்சட்டத்தினாலும் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் பிரிவு 57 (2) இற்கமைவான குலைப்பு நடவடிக்கையினை முடிவுறுத்துவதற்கான அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் விபரப்படியான குலைப்பு நடவடிக்கைகள் யாவும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச்சட்டத்தினாலும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச்சட்டத்தினாலும் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் பிரிவு 57 (2) இற்கமைவாக அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறித்த திகதிகளில் முடிவுறுத்தப்பட்டுள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

பொன்னம்பலம் வாகீசன்,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்,
வடக்கு மாகாணம்.

| தொ. இல. | பதிவு இல. | சங்கத்தின் பெயர் | முடிவுறுத்தப்பட்ட திகதி | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 01 | JE/65 | கோயிலாக்கண்டி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் | 20.08.1999 | யாழ்ப்பாணம் |
| 02 | J/72 | ஆதி மயிலிட்டி ஐக்கிய நாணய சங்கம் | 25.08.1999 | யாழ்ப்பாணம் |
| 03 | J/320 | புளியங்கூடல் கூட்டுறவுச் சிக்கன கடனுதவு கூட்டுவுச் சங்கம் | 28.02.1998 | யாழ்ப்பாணம் |
| 04 | J/1194 | கச்சாய் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் | 20.08.1999 | யாழ்ப்பாணம் |
| 05 | J/598 | கருகம்பானை பண்டசாலை கூட்டுறவுச் சங்கம் | 20.08.1999 | யாழ்ப்பாணம் |
| 06 | JE/55 | கைதடி கிழக்கு ஐக்கிய நாணய சங்கம் | 31.10.2001 | யாழ்ப்பாணம் |
| 07 | JE/207 | பருத்தித்துறை தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் | 15.09.1998 | யாழ்ப்பாணம் |
| 08 | J/1358 | புன்னாலை மேற்கு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் | 15.08.2001 | யாழ்ப்பாணம் |
| 09 | JE/100 | சாவகச்சேரி பெண்கள் ஐக்கிய நாணய சங்கம் | 18.09.2001 | யாழ்ப்பாணம் |
| 10 | J/1288 | தோப்புக்காடு விநாயகர் ஐக்கிய நாணய சங்கம் | 16.12.2002 | யாழ்ப்பாணம் |
| 11 | J/1037 | வடமராட்சி விவசாய உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கம் | 30.08.1999 | யாழ்ப்பாணம் |
| 12 | J/962 | கோயிற்கடவை ஐக்கிய நாணய சங்கம் | 03.11.1999 | யாழ்ப்பாணம் |
| 13 | JE/1200 | வடமராட்சி மோட்டார் சேவை கூட்டுறவுச் சங்கம் | 28.10.1999 | யாழ்ப்பாணம் |
| 14 | J/1200 | வடவரணி ஐக்கிய நாணய சங்கம் | 15.08.1999 | யாழ்ப்பாணம் |
| 15 | JE/20 | புற்றளை ஐக்கிய நாணய சங்கம் | 15.09.1989 | யாழ்ப்பாணம் |
| 16 | J/16 | ஈழகாமம் கடனுதவு கூட்டுறவுச் சங்கம் | 30.11.1998 | யாழ்ப்பாணம் |

| தொ. இல. | பதிவு இல. | சங்கத்தின் பெயர் | முடிவுறுத்தப்பட்ட திகதி | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 17 | JE/1276 | கொடிகாமம் ஐக்கிய நாணய சங்கம் | 30.07.2000 | யாழ்ப்பாணம் |
| 18 | J/1036 | வதிரி மகாத்மாஜி ஐக்கிய நாணய சங்கம் | 01.12.1998 | யாழ்ப்பாணம் |
| 19 | J/908 | யாழ் இசைக்கலை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் | 01.12.1998 | யாழ்ப்பாணம் |
| 20 | J/E66 | குமாரத்துப்பிட்டி பெண்கள் ஐக்கிய நாணய சங்கம் | 31.08.1998 | யாழ்ப்பாணம் |
| 21 | J/332 | வதிரி மத்தி ஐக்கிய நாணய சங்கம் | 01.12.1998 | யாழ்ப்பாணம் |
| 22 | J/187 | வரைவற்ற புத்தூர் வடக்கு ஐக்கிய நாணய சங்கம் | 01.12.1998 | யாழ்ப்பாணம் |
| 23 | J/936 | யாழ்ப்பாணம் மலையாளம் புகையிலை உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கம் | 31.07.2000 | யாழ்ப்பாணம் |
| 24 | JE/52 | இமையாணன் விஸ்வகுல ஐக்கிய நாணய சங்கம் | 18.03.2004 | யாழ்ப்பாணம் |
| 25 | J/219 | தாவடி வடக்கு ஐக்கிய நாணய சங்கம் | 04.03.2005 | யாழ்ப்பாணம் |
| 26 | J/317 | திருநெல்வேலி வடக்கு ஐக்கிய நாணய சங்கம் | 18.03.2004 | யாழ்ப்பாணம் |

02-220

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.